**கூடுதல் மகளிர் நீதிமன்றம் (நீ.ந.நிலை), தேனி.**

**முன்னிலை : செல்வி. D. ஜெயபாரதி, L.L.M.,**
நீதித்துறை நடுவர்.

கூடுதல் மகளிர் நீதிமன்றம் (நீ.ந.நிலை), தேனி.

2058 திருவள்ளுவர் ஆண்டு ஸ்ரீபராபவ வருடம் ஆடி மாதம் 05–ம் நாள்

2026–ம் ஆண்டு ஜுலை மாதம் 21–ம் நாள் செவ்வாய் கிழமை

## C.C. No.706/2025

CNR No.TNTH02-007-493-2025

| | | | |
|---|---|---|---|
| 1. | ஆண்டு பட்டிகை வழக்கு எண் | : | 706 / 2025 |
| 2. | வழக்கு கோப்பிற்கு எடுக்கப்பட்ட எண். | : | TNTH02-007-493-2025 |
| 3. | குற்றமுறையீட்டாளர் | : | அரசுக்காக, காவல் ஆய்வாளர்,<br>தேனி காவல்நிலையம்,<br>தேனி. |
| 4. | குற்ற எண் மற்றும் இதச பிரிவுகள் | : | Cr.No.623/2025; u/s.296(b), 115(2), 351(2) of BNS and 4 of TNPHW Act. |
| 5. | குற்றம் சாட்டப்பட்டவர் பெயர், வயது, தந்தைப்பெயர் மற்றும் முகவரி | : | சதீஷ்குமார், 34/25,<br>த.பெ.அய்யனார்,<br>பட்டி தெரு, சீப்பாலக்கோட்டை, தற்போது சிவராம் நகர், மாவு மில் தெரு, தேனி. |
| 6. | சம்பவ தேதி | : | 30.10.2025 |
| 7. | புகார் அளிக்கப்பட்ட தேதி | : | 04.11.2025 |
| 8. | எதிரி கைது செய்யப்பட்ட நாள் | : | 05.11.2025 |
| 9. | எதிரி பிணையில் சென்ற நாள் | : | 12.11.2025 |
| 10. | எதிரி மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டு | : | எதிரி மீது u/s.296(b), 115(2), 351(2) of BNS and 4 of TNPHW Act.பிரிவுகளின் கீழ் குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டுள்ளது. |

JAYABHARATHI DURAI

Digitally signed by JAYABHARATHI DURAI
Date: 2026.07.21 04:17:03 +0530

| | | | |
|---|---|---|---|
| 11. | எதிரிகள் மீது வனையப்பட்ட குற்றச்சாட்டு | : | எதிரி மீது u/s.296(b), 115(2), 351(2) of BNS and 4 of TNPHW Act பிரிவுகளின் கீழ் குற்றச்சாட்டு வனையப்பட்டுள்ளது. |
| 12. | எதிரியின் பதில் | : | குற்றவாளி இல்லை |
| 13. | வழக்கின் விசாரணை தொடங்கிய நாள் | : | 06.02.2026 |
| 14. | வழக்கின் விசாரணை முடிவுற்ற நாள் | : | 10.07.2026 |
| 15. | தீர்ப்புரை பகரப்பட்ட நாள் | : | 21.07.2026 |
| 16. | நீதிமன்றத்தின் தீர்மானம் | : | எதிரி மீது u/s.296(b), 115(2), 351(2) of BNS and 4 of TNPHW Act பிரிவுகளின் கீழ் வனையப்பட்ட குற்றச்சாட்டுகள் அரசு தரப்பில் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்படவில்லை என்று இந்நீதிமன்றம் தீர்மானம் கொள்கிறது. |
| 17. | தீர்ப்பும் தண்டனையும் | : | முடிவில், எதிரி மீதான u/s.296(b), 115(2), 351(2) of BNS and 4 of TNPHW Act பிரிவுகளின் கீழான குற்றச்சாட்டினைப் பொறுத்து அரசு தரப்பால் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கப்படவில்லை என்று முடிவு செய்து எதிரியை 271(1) of BNSS பிரிவின் கீழ் எதிரியை விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது . |
| 18. | தீர்ப்பின் நகல் எதிரிக்கு வழங்கப்பட்ட நாள் | : | இல்லை |
| 19. | காலதாமதத்திற்கான காரணம் | : | இல்லை |

JAYABHARATHI DURAI

Digitally signed by JAYABHARATHI DURAI
Date: 2026.07.21 04:17:10 +0530

இவ்வழக்கானது 03.12.2025-ம் தேதியன்று கோப்பிற்கு எடுக்கப்பட்டு, அரசு தரப்பில் அரசு உதவி வழக்கறிஞர் நிலை 2 அவர்கள் ஆஜராகியும், எதிரி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.M.பிரபாகரன் அவர்கள் ஆஜராகியும், சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்களை பரிசீலனை செய்தும் இறுதியாக இருதரப்பு வாதங்களும் கேட்கப்பட்டும் இதுநாள் வரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து வந்த, இந்த வழக்கில், இன்று இந்நீதிமன்றம் வழங்கிடும்....

**தீர்ப்புரை**

1) **அரசு தரப்பு வழக்கின் சுருக்கம்**

இவ்வழக்கின் வாதி ஹேமலதா எதிரி சதீஷ்குமாரை இரண்டாவதாக திருமணம் செய்து கொண்டதாகவும், எதிரிக்கும் அவருடன் வேலை பார்க்கும் பெண்ணுக்கும் பழக்கம் இருப்பதாக வாதி சந்தேகப்பட்டு எதிரியை கண்டித்ததாகவும், அதன் காரணமாக கடந்த 30.10.2025-ம் தேதி 23.00 மணியளவில் எதிரி மது குடித்துவிட்டு வந்து வாதியை பார்த்து ஏண்டி தேவடியா என்னை கேட்க நீ யாருடி நீ என்ன பெரிய ஒழுக்கமா நான் அப்படித்தாண்டி இருப்பேன் உன்னால என்ன செய்ய முடியும் என்று அசிங்கமாகப் பேசி கையால் மாறி மாறி அடித்து கழுத்தை பிடித்து நெறித்து கொன்றுவிடுவேன் என்று மிரட்டியதாகவும், மறுநாள் 31.10.2025-ம் தேதியும் தொடர்ந்து எதிரி பிரச்சனை செய்ததன் காரணமாக மன உளைச்சலால் வாதி 01.11.2025-ம் தேதி அதிகப்படியான மாத்திரைகளை சாப்பிட்டுவிட்டு தனது அம்மா வீட்டிற்கு சென்று கூறியதன் காரணமாக க.விலக்கு அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்த்ததாகவும், சிகிச்சைக்கு பின்னர் வாதி தனது அம்மா வீட்டில் இருந்தபோது எதிரி மீண்டும் குடித்துவிட்டு வந்து வீட்டின் கதவை காலால் உதைத்து வெளியே வாடி தேவடியா முண்ட அவுசாரி முண்ட என்று தெருவில் நின்று வாதியை பற்றி அசிங்கமாகப் பேசி சத்தம் போட்டதாகவும் அதன் காரணமாக எதிரி மீது u/s.296(b), 115(2), 351(2) of BNS and 4 of TNPHW Act பிரிவுகளின் கீழ் தேனி காவல்நிலைய ஆய்வாளர் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

JAYABHARATHI DURAI

Digitally signed by JAYABHARATHI DURAI
Date: 2026.07.21 04:17:15 +0530

2) **<u>அழைப்பாணை சார்வு செய்தல், நகல்கள் வழங்குதல் மற்றும் குற்றச்சாட்டு பற்றி வினவுதல்:</u>**

குற்றமுறையீட்டாளர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட எதிரி மீதான இறுதி அறிக்கை நீதிமன்ற கோப்பிற்கு எடுத்துக்கொண்ட பின் நீதிமன்றத்தின் அழைப்பாணையின் பேரில், எதிரி நீதிமன்றத்தில் ஆஜரானதும் வழக்கு ஆவணங்களின் நகல்கள் அனைத்தும் கு.வி.மு.ச.பிரிவு 207ன் கீழ் எதிரிக்கு இலவசமாக வழங்கப்பட்டு, எதிரிக்கு போதிய கால அவகாசம் வழங்கப்பட்டு, வழக்கு ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டு எதிரி குற்றம் புரிந்திருப்பதற்கான முகாந்திரம் இருப்பதாக தோன்றியதால் எதிரி மீது u/s.296(b), 115(2), 351(2) of BNS and 4 of TNPHW Act பிரிவுகளின் கீழ் குற்றச்சாட்டு வனைந்து தமிழில் விளக்கி வினவிய போது எதிரி குற்றவாளி இல்லை என்றும், குற்றச்சாட்டை மறுத்தும் வழக்கு விசாரணை வேண்டினார்.

3) எதிரி குற்றத்தை மறுத்ததால் அரசுத் தரப்பில் சாட்சிகள் விசாரிக்க உத்தரவிடப்பட்டு சாட்சிக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டு அரசு தரப்பில், அ.சா.1 மற்றும் அ.சா.2 வரையானவர்கள் விசாரிக்கப்பட்டும், அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.5 வரையிலான சான்றாவணங்களும் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

4) **<u>அரசுத் தரப்பின் சாட்சி மற்றும் சான்றாவணங்கள் மூலம் புலனாகும் அரசுத் தரப்பு வழக்கின் சுருக்கம் :-</u>**

இவ்வழக்கின் புகார்தார்தாரர் / அ.சா.1 ஹேமலதா என்பவரும் எதிரியும் கணவன் மனைவி என்றும், கடந்த 30.10.2025-ம் தேதி இரவு 11.00 மணியளவில் எதிரி குடித்துவிட்டு வந்து அ.சா.1-ஐ பார்த்து அசிங்கமாகப் பேசியும், கழுத்தை நெறித்து கொன்றுவிடுவேன் என்று மிரட்டியதாகவும், அதனால் 04.11.2025-ம் தேதியன்று அ.சா.1 தேனி காவல் நிலையம் சென்று புகார் கொடுத்ததாகவும், புகாரில் உள்ள கையெழுத்து மட்டும் அ.சா.ஆ.1 என்றும், புகார் அ.சா.ஆ.2 என்றும் கூறப்பட்டுள்ளது. மேற்படி அ.சா.ஆ.2 புகாரினை சார்பு ஆய்வாளர் ராஜமாணிக்கம் பரிசீலித்து முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.3 பதிவு செய்ததாகவும், அன்றைய தினம் சார்பு ஆய்வாளர் சம்பவ இடம் சென்று சாட்சிகள் முன்னிலையில் பார்வை மகஜர் அ.சா.ஆ.4 மற்றும்

JAYABHARATHI DURAI
Digitally signed by JAYABHARATHI DURAI
Date: 2026.07.21 04:17:20 +0530

மாதிரி வரைபடம் அ.சா.ஆ.5 தயார் செய்ததாகவும், பின்னர் சாட்சிகளை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்ததாகவும், எதிரியை 05.11.2025–ம் தேதி கைது செய்ததாகவும், சார்பு ஆய்வாளர் விசாரணை முடித்து குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்ததாகவும், குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்த சார்பு ஆய்வாளர் ராஜமாணிக்கம் பணி மாறுதல் பெற்றுச் சென்றுவிட்டதால், வழக்கு கோப்பினை பார்த்து அ.சா.2 மணி, சிறப்பு சார்பாய்வாளர் சாட்சியமளித்ததாகவும் கூறப்பட்டுள்ளது.

**5)** இவ்வழக்கின் அ.சா.2–ன் சாட்சியத்தில் எதிரிக்கு பாதகமாக தோன்றும் சங்கதிகளை பிரிவு 351(1)(b) BNSS–ன் கீழ் எதிரியிடம் எடுத்துரைத்து வினவியபோது, எதிரி பொய் சாட்சியம் எனவும், தன் மீதான வழக்கு பொய் வழக்கு என்றும் தனது தரப்பில் விசாரிக்க சாட்சிகள் இல்லை என்றும் கூறியதன் பேரில் எதிரி தரப்பு சாட்சியம் முடிக்கப்பட்டது.

**6)** இரு தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர்களின் வாதம் கேட்கப்பட்டது. வழக்கு கோப்பு ஆவணங்கள் அனைத்தும் கவனமாக பரிசீலனை செய்யப்பட்டது. இவ்வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை யாதெனில் அரசு தரப்பில் எதிரி மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டு சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதா ? என்பதே ஆகும்.

**7)** **<u>தீர்வு மற்றும் தீர்வுக்குரிய காரணங்கள்:</u>**

**இருதரப்பு வாதம் கேட்கப்பட்டது. வழக்கு ஆவணங்கள் நன்கு பரிசீலிக்கப்பட்டது.**

(7–1) புகார்தாரரும் / அ.சா.1–மான ஹேமலதா தனது சாட்சியத்தில் கடந்த 2025–ம் வருடம் ஒருநாள் எதிரிக்கும் தனக்கும் பிரச்சனை ஏற்பட்டது என்றும், எனவே, காவல் நிலையம் சென்று விசாரிக்க சொன்னேன் என்றும், போலீசார் என்னிடம் வெற்றுத்தாளில் கையொப்பம் பெற்றுக்கொண்டார்கள் என்றும், அந்த கையெழுத்து மட்டும் அ.சா.ஆ.1 என்றும், வழக்கு நிலுவையில் இருந்தபோது எதிரியுடன் சமாதானம் ஆகிவிட்டோம் என்றும், போலீசார் தன்னை விசாரிக்கவில்லை என்றும் அரசு தரப்பிற்கு முற்றிலும் முரணாக பிறழ் சாட்சியமளித்துள்ளார்.

(7–2) அன்றைய தினம் கற்றறிந்த அரசு தரப்பு வழக்கறிஞர் வேறொரு நீதிமன்ற பணிக்குச் சென்றுவிட்டதால் அ.சா.1–டம் நீதிமன்ற கேள்வி கேட்டபோது

JAYABHARATHI DURAI
Digitally signed by JAYABHARATHI DURAI
Date: 2026.07.21 04:17:26 +0530

" எதிரி என்னை மிரட்டினாரா என்றால் இல்லை. "

என்று சாட்சியமளித்துள்ளார். மேற்படி அ.சா.1–ன் சாட்சியத்திலிருந்து எதிரி வழக்கை திரும்ப பெறுமாறு அ.சா.1–ஐ மிரட்டியதாக தெரியவரவில்லை என்று இந்நீதிமன்றம் கருதுகிறது. எனவே, அ.சா.1–ன் மேற்படி சாட்சியத்தின் காரணமாக எதிரி மீதான குற்றச்சாட்டுகளைப் பொறுத்து ஐயப்பாடு எழுவதாக இந்நீதிமன்றம் கருதுகிறது. மேலும், கற்றறிந்த எதிரி தரப்பு வழக்கறிஞர் அ.சா.1–ம், எதிரியும் சேர்ந்து சமரச மனு தாக்கல் செய்துள்ளதாக தெரிவித்தார்.

(7–3) அ.சா.2 மணி, சிறப்பு சார்பு ஆய்வாளர் தனது சாட்சியத்தில் கடந்த 04.11.2025 அன்று 13.00 மணிக்கு சார்பு ஆய்வாளர் ராஜமாணிக்கம் நிலைய பொறுப்பில் இருந்தபோது, அ.சா.1 நிலையம் ஆஜராகி கொடுத்த புகார் மனுவை பெற்று பரிசீலித்து அதன் தன்மைக்கு ஏற்ப நிலைய குற்ற எண். 623/2025 ஆக பிரிவுகள் 296(b), 115(2), 351(2) of BNS மற்றும் தமிழ்நாடு பெண்கள் வன்கொடுமை தடுப்புச் சட்டம் பிரிவு 4–ன் படியும் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தார் என்றும், அந்த புகார் மனு அ.சாஆ. 2 என்றும், முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.3 என்றும், இவ்வழக்கினை புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு, சம்பவ இடம் 04.11.2025 அன்று 16.00 மணிக்கு சென்று சாட்சிகள் ஹிஹரன் மற்றும் பிரகாஷ் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தார் என்றும், பார்வை மகஜர் அ.சா.ஆ.4 என்றும், மாதிரி வரைபடம் அ.சாஆ.5 என்றும், சாட்சிகள் 1 முதல் 7 வரையானவர்களை தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார் என்றும், இவ்வழக்கின் எதிரியை 05.11.2025 அன்று காலை 07.00 மணிக்கு தேனி எம்.ஜி.ஆர் நகர் எதிரியின் அப்பா வீட்டில் வைத்து கைது செய்து உறவினர்களுக்கு தகவல் தெரிவித்து எதிரியை தக்க வழிக்காவலுடன் நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தியுள்ளார் என்றும், பின்னர் விசாரணை முடித்து குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்ததாகவும் சாட்சியமளித்துள்ளார்.

**8)** அரசு தரப்பால் எதிரி மீதான 296(b) BNS பிரிவின் கீழான குற்றச்சாட்டு அரசு தரப்பால் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதா ? என்று பார்க்கும்போது அ.சா.1

JAYABHARATHI DURAI
Digitally signed by JAYABHARATHI DURAI
Date: 2026.07.21 04:17:31 +0530

தனது புகாரில் 30.10.2025–ம் தேதி இரவு 11.00 மணியளவில் எதிரி வாதியை பார்த்து நான் அப்படித்தாண்டி இருப்பேன் என்று அசிங்கமாகப் பேசியதாக கூறியுள்ள நிலையில், அ.சா.1 தனது நீதிமன்ற சாட்சியத்தில் அவ்வாறு எந்த சங்கதியும் குறிப்பிடவில்லை. மேலும், அ.சா.1 தனது நீதிமன்ற சாட்சியத்தில் போலீசார் என்னிடம் வெற்றுத்தாளில் கையொப்பம் பெற்றுக்கொண்டார்கள் என்றும், அந்த கையெழுத்து மட்டும் அ.சா.ஆ.1 என்றும், வழக்கு நிலுவையில் இருந்தபோது எதிரியுடன் சமாதானம் ஆகிவிட்டோம் என்றும், போலீசார் தன்னை விசாரிக்கவில்லை என்றும், எதிரி என்னை மிரட்டினாரா என்றால் இல்லை என்றும் சாட்சியமளித்துள்ளதிலிருந்து, எதிரி அ.சா.1–ஐ பொது இடத்தில் வைத்து அசிங்கமாகப் பேசியதாகவோ, அதனால் அ.சா.1–க்கு அருவருப்பு ஏற்பட்டதாகவோ இந்நீதிமன்றத்தால் கருத இயலவில்லை. எனவே, எதிரி மீதான 296(b) BNS பிரிவின் கீழான குற்றச்சாட்டு அரசு தரப்பால் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்படவில்லை என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

**9)** எதிரி மீதான 115(2) BNS பிரிவின் கீழான குற்றச்சாட்டினைப் பொறுத்து பார்க்கும்போது அ.சா.1 தனது புகாரில் எதிரி தன்னை அடித்து கழுத்தை நெறித்து கொன்றுவிடுவேன் என்று கூறியுள்ள நிலையில், அ.சா.1 தனது நீதிமன்ற சாட்சியத்தில் அவ்வாறு எந்த சங்கதிகளையும் குறிப்பிட்டு கூறவில்லை. மேலும், வழக்கு நிலுவையில் இருந்தபோது எதிரியுடன் சமாதானம் ஆகிவிட்டோம் என்றும், போலீசார் தன்னை விசாரிக்கவில்லை என்றும், எதிரி என்னை மிரட்டினாரா என்றால் இல்லை என்றும் சாட்சியமளித்துள்ளதிலிருந்து எதிரி அ.சா.1–ஐ அடித்து கழுத்தை நெறித்ததாக இந்நீதிமன்றத்தால் கருத இயலவில்லை. எனவே, எதிரி மீதான 115(2) BNS பிரிவின் கீழான குற்றச்சாட்டு அரசு தரப்பால் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்படவில்லை என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

**10)** எதிரி மீதான 351(2) BNS பிரிவின் கீழான குற்றச்சாட்டினைப் பொறுத்து பரிசீலிக்கையில், அ.சா.1 தான் கொடுத்த புகாரில் எதிரி தன்னை கழுத்தை நெறித்து கொன்றுவிடுவேன் என்று கொலை மிரட்டல் விடுத்ததாக கூறியுள்ள நிலையில், அ.சா.1 தனது நீதிமன்ற சாட்சியத்தில் அவ்வாறு எந்த சங்கதிகளையும் குறிப்பிட்டு கூறவில்லை. மேலும், வழக்கு நிலுவையில் இருந்தபோது எதிரியுடன் சமாதானம்

JAYABHARATHI DURAI
Digitally signed by JAYABHARATHI DURAI
Date: 2026.07.21 04:17:36 +0530

ஆகிவிட்டோம் என்றும், போலீசார் தன்னை விசாரிக்கவில்லை என்றும், எதிரி என்னை மிரட்டினாரா என்றால் இல்லை என்றும் சாட்சியமளித்துள்ளதிலிருந்து எதிரி, அ.சா.1–க்கு கொலை மிரட்டல் விடுத்து உடனடி உயிர் பயத்தை ஏற்படுத்தினார் என்று அரசு தரப்பால் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்படவில்லை என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

**11)** எதிரி மீதான 4 of TNPHW Act பிரிவின் கீழான குற்றச்சாட்டினைப் பொறுத்து பரிசீலிக்கையில், அ.சா.1 தான் கொடுத்த புகாரில் எதிரி குடித்துவிட்டு வந்து அசிங்கமாகப் பேசி தன்னை கழுத்தை நெறித்து கொன்றுவிடுவேன் என்று கொலை மிரட்டல் விடுத்ததாக கூறியுள்ள நிலையில், அ.சா.1 தனது நீதிமன்ற சாட்சியத்தில் அவ்வாறு எந்த சங்கதிகளையும் குறிப்பிட்டு கூறவில்லை. மேலும், வழக்கு நிலுவையில் இருந்தபோது எதிரியுடன் சமாதானம் ஆகிவிட்டோம் என்றும், போலீசார் தன்னை விசாரிக்கவில்லை என்றும், எதிரி என்னை மிரட்டினாரா என்றால் இல்லை என்றும் சாட்சியமளித்துள்ளார். மேலும், Sec. 4 of TNPHW Act பிரிவின் படி சம்பவமானது பொது இடத்தில் நடைபெற்றுள்ளதா? என்று பார்க்கும்போது, இவ்வழக்கின் புகாரிலிருந்து இச்சம்பவமானது பொது இடத்தில் வைத்து நடைபெறவில்லை என்பதும், வாதியின் வீட்டில் வைத்து நடைபெற்றுள்ளது என்பதும் தெரியவருகிறது. எனவே, மேற்படி எதிரி மீதான Sec. 4 of TNPHW Act பிரிவின் கீழான குற்றச்சாட்டு அரசு தரப்பால் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிருபிக்கப்படவில்லை என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

**12)** இங்கு அ.சா.1–டம் நீதிமன்ற கேள்வி வினவியபோது தற்போது எதிரியுடன் சமாதானம் ஆகி விட்டோம் என்றும், எதிரி தன்னை மிரட்டவில்லை என்றும் கூறி அரசு தரப்பு வழக்கிற்கு முற்றிலும் முரண்பட்டு அளித்துள்ள நிலையில், அதனடிப்படையில் பதிவு செய்யப்பட்டதாக கூறும் முதல் தகவல் அறிக்கை பற்றியும், அதில் உள்ள சங்கதிகள் பற்றியும் சந்தேகம் எழுகிறது.

**13)** மேற்கண்டவாறு அரசு தரப்பில் முன்னிறுத்தப்பட்ட அ.சா.1–ம் எதிரியும் நீதிமன்றத்திற்கு வெளியே சமாதானம் பேசி முடித்து கொண்டதாக கூறி பிரிவு 359 BNSS ன் கீழ் மனுதாக்கல் செய்து அம்மனு கோப்பிற்கு எடுக்கப்பட்டதில் இவ்வழக்கின்

JAYABHARATHI DURAI

Digitally signed by JAYABHARATHI DURAI
Date: 2026.07.21 04:17:42 +0530

குற்றப்பிரிவுகள் சமரசம் செய்து கொள்ளமுடியாத குற்றங்கள் என்பதால் அம்மனு தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது. இவ்வழக்கில் முன்னிறுத்தப்பட்டுள்ள அ.சா.1 அரசு தரப்பிற்கு முற்றிலும் முரண்பட்டு சாட்சியமளித்துள்ள நிலையில், புலன் விசாரணை அதிகாரியான அ.சா.2–ன் சாட்சியத்தை மட்டும் வைத்து அரசு தரப்பில் எதிரி மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகளை போதிய சாட்சிய சான்றாவணங்களுடன் நிரூபிக்கப்பட்டதாக கருத இயலாது என இந்நீதிமன்றம் கருதுகிறது.

**14)** இறுதியாக, எதிரி மீதான u/s.296(b), 115(2), 351(2) of BNS and 4 of TNPHW Act பிரிவுகளின் கீழான குற்றச்சாட்டினைப் பொறுத்து அரசு தரப்பால் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கப்படவில்லை என்று முடிவு செய்து எதிரியை 271(1) BNSS பிரிவின் கீழ் எதிரியை விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது.

**15)** இந்த வழக்கு விசாரணையின் போது எதிரி பிணையில் இருந்துள்ளார். எனவே எதிரி மீதான பிணைமுறி பத்திரம் இவ்வழக்கின் மேல் முறையீட்டு காலத்திற்கு பின்னர் அல்லது மேல்முறையீடு எதுவும் நிலுவையில் இருப்பின் அது முடிந்த பின்னர் ரத்து செய்யப்பட வேண்டும் என்று உத்தரவிடப்படுகிறது.

**16)** இவ்வழக்கில் வழக்கு சொத்துக்கள் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை. எனவே வழக்குச் சொத்து பற்றிய தனிப்பட்ட உத்தரவு எதுவும் இல்லை.

இத்தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணிணியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு 2026–ம் ஆண்டு ஜுலை மாதம் 21–ம் நாள் திறந்த நீதிமன்றத்தில் என்னால் அவையறிய பகரப்பட்டது.

JAYABHARATHI DURAI
Digitally signed by JAYABHARATHI DURAI
Date: 2026.07.21 04:17:48 +0530

நீதித்துறை நடுவர்,
கூடுதல் மகளிர் நீதிமன்றம்,
தேனி.

<u>அரசுத் தரப்பு சாட்சிகள்:</u>

| அரசு தரப்பு சாட்சிகள் | பெயர் | விபரம் |
|---|---|---|
| அ.சா.1 | ஹேமலதா | புகார்தாரர் |

| | | |
|---|---|---|
| அ.சா.2 | மணி | புலன் விசாரணை அதிகாரி |

**அரசுத் தரப்பு சான்றாவணங்கள்:**

| அரசு தரப்பு சான்றாவணங்கள் | சான்றாவணங்கள் விபரம் | சான்றாவணங்கள் யாரால் குறியீடு செய்யப்பட்டது. |
|---|---|---|
| அ.சா.ஆ.1 | புகாரில் உள்ள அ.சா.1–ன் கையெழுத்து மட்டும் | அ.சா.1 |
| அ.சா.ஆ.2 | புகார் | அ.சா.2 |
| அ.சா.ஆ.3 | முதல் தகவல் அறிக்கை | அ.சா.2 |
| அ.சா.ஆ.4 | பார்வை மகஜர் | அ.சா.2 |
| அ.சா.ஆ.5 | மாதிரி வரைபடம் | அ.சா.2 |

**அரசுத் தரப்பு சான்று பொருள்:** **இல்லை.**

**எதிரி தரப்பு சாட்சி:** **இல்லை.**

**எதிரி தரப்பு சான்றாவணம் மற்றும் சான்று பொருள்:** **இல்லை.**

JAYABHARATHI DURAI

Digitally signed by JAYABHARATHI DURAI
Date: 2026.07.21 04:17:56 +0530

நீதித்துறை நடுவர்,
கூடுதல் மகளிர் நீதிமன்றம்,
தேனி.

**குறிப்பு :**

வழக்கின் முடிவு குறித்து காவல்துறைக்குத் தெரிவிக்கப்பட்டது.

எந்த சாட்சியும் மூன்று தினங்களுக்கு மேல் நிறுத்தி வைக்கப்படவில்லை.

வழக்கு விசாரணையின்போது எதிரி பிணையிலிருந்தார்.

இவ்வழக்கில் சொத்துக்கள் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை.